AL12-2-2

# பரலோகம்: எப்படி இருக்கும்? – பரலோகத்தின் எதிர்கால மகிமை –

## நிகழ்ச்சி 2

இன்றைய ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியின் தலைப்பு: பரலோகம் எப்படி இருக்கும்? நாம் செல்லவிருக்கும் அந்த மகத்தான உலகம் பற்றி தேவன் என்ன சொல்கிறார்? நீங்கள் டிஸனி லேன்ட் செல்வதற்கோ, ஆஸ்பெனில் பனிசறுக்கு விளையாடவோ, ஐரோப்பா செல்வதற்கோ திட்டமிட்டால், சம்பந்தப்பட்ட கையேடுகளை பார்ப்பீர்கள், அல்லது வெப்சைட்டை நாடுவீர்கள். அந்த விவரங்கள் அது குறித்து நம்மை வியக்கவைக்கும்.

ஆனால் பரலோகம் பற்றிய கையேடுதான் பைபிள், நாம் ஒரு புதிய பரலோகத்தையும், புதிய உலகத்தையும் தேவனின் வாக்குத்தத்தப்படி அதில் காணமுடியும். பரலோகம் பற்றி வேதவசனம் கூறுவது இதுதான், “அது ஒரு புதிய பரலோகம், அது ஒரு புதிய உலகம்.” அது ஏதோவொரு நாளில் உங்கள் இல்லமாகும், உங்களுக்கு பரலோகம் பற்றி என்ன தெரியும்? நீங்கள் நித்திய ஜீவனை அனுபவிக்கப்போகிற அந்த இடத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள், அங்கு எதை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

இன்றைய எங்கள் விருந்தினர் பரலோகம் பற்றிய புத்தகம் எழுதியவர், டாக்டர். ரேன்டி அல்கார்ன், தேவன் வாக்குத்தத்தம் அளித்துள்ள அந்த இடத்தைப் பற்றி அவர் நமக்கு விளக்குவார், கிறிஸ்தவர்கள் அதன்மூலம் அந்த வருங்கால இல்லம் பற்றிய பல விவரங்களை அறிந்துகொள்ள முடியும். ஜான் அன்கர்பர்கின் நிகழ்ச்சியை காண எங்களோடு இணைந்திருங்கள்.

-----------------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: எங்கள் நிகழ்ச்சிக்கு வரவேற்கிறேன். அமெரிக்காவில் பரலோகம் பற்றிய புத்தகம் எழுதிய பிரபல ஆதாரமாக உள்ளவரோடு பேசப்போகிறோம், அவர்தான் டாக்டர். ரேன்டி அல்கார்ன். இன்று நாம் உற்சாகமான விவாதம் கேட்க உள்ளோம், அதன் மூலம் உங்கள் பிள்ளைகளோ, பேரக் குழந்தைகளோ பரலோகம் பற்றி கேட்கும் கேள்விகளுக்கு உங்களால் பதில சொல்ல முடியும்.

நீங்கள் சற்று சிந்தித்துப்பாருங்கள், இதுபோன்ற கேள்விகளை ஏதாவது சூழ்நிலையில் உங்கள் வாழ்வில் நீங்கள் சந்தித்திருப்பீர்கள், ரேன்டி அதைப் பற்றி கூறுங்கள், பரலோகம் பற்றி அதிக விற்பனையான புத்தகத்தை நீங்கள் எல்லாருக்காவும் குறிப்பாக குழந்தைகளுக்காகவும் எழுதியுள்ளீர்கள், பல வழிகளில் பரலோகம் பற்றி நீங்கள் மிகவும் தெளிவாக கூறியுள்ளீர்கள்.

டாக்டர். ரேன்டி அல்கார்ன்: குழந்தைகள் ஆர்வமுள்ளவர்கள். நாம் குழந்தைகளைப் போல் இருக்குமாறு இயேசு கூறியுள்ளார். குழந்தைகள் கேள்விகள் கேட்கும், அவர்களுக்கு தேவை பதில். சிலநேரங்களில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மேற்பட்ட விவரங்களையும் நம்மால் கூற முடியும். அது வயதுக்கு ஏற்றதுபோல இருக்கவேண்டும், அதுபற்றி கூறுங்கள், இதை புரியுமாறு குழந்தைகளுக்கு எப்படி கூறுவது, அவர்கள் பரலோகம் பற்றி வித்தியாசமான கேள்விகள் கேட்பார்கள், நமக்கு பரலோகம் பற்றி நன்றாக தெரிந்திருப்பாதாக அவர்கள் நம்மை விசுவாசிப்பார்கள். தேவன் கூறியதை அவர்கள் விசுவாசிப்பார்கள், ஏனென்றால் பைபிள் பரலோகம் உள்ளதாகக் கூறுகிறது, அது எப்படி இருக்கும் என்றும் அங்கே என்ன நடக்கிறது என்றும் அறிய விரும்புவார்கள், அதை அவர்கள் அறிய விரும்புவார்கள், அதை பலவிதமாக கற்பனை செய்வார்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: அவர்களிடம் அன்பு காட்டிய அவர்களது தாத்தா, பாட்டியும், அல்லது அவர்களது தாயும் தந்தையும் அல்லது அவர்களது சகோதர சகோதரிகளும் இறந்திருக்கக் கூடும். எது உறவினருக்கு இரட்டை குழந்தைகள். அவர்களுக்கு 12 அல்லது 13 வயதாக இருக்கும்போது, ஒரு குழந்தை துரதிஷ்டவசமாக இறந்துவிட்டது. அதன் அடக்கத்திற்கு சென்றது என் நினைவில் உள்ளது, இப்படிபட்ட சூழ்நிலை வரும்போது, அக்குழந்தைகள் கேட்பார்கள், “அம்மா, பாட்டி, தாத்தா, எனக்கு பரலோகம் பற்றி கூறுங்கள்,” என்று, அவர்கள் இதை எப்படி கேட்பார்கள், நீங்கள் பரலோகம் பற்றி என்ன கூறுவீர்கள்?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: நான் முதலில் கூற விரும்புவது, பரலோகத்தில் இருக்கவேண்டுமானால் நீங்கள் இயேசுவுடன் இருங்கள்.'' நான் மேலும் அழுத்தமாக சொல்வது என்ன வென்றால், ''பிதாவாகிய தேவனோடு இருங்கள், பரிசுத்த ஆவியோடும் இருங்கள்.'' ஏனென்றால் இயேசு தேவனோடு இணைந்தவர். இயேசு மனிதனாக வந்தார். அவரை அக்கால மக்களால் பார்க்கவும், உணரவும் முடிந்தது, அவர் உயிர்தெழுந்ததும் சொன்னார், ''நான் ஆவியல்ல, எனக்கு உள்ளதுபோல் ஆவிக்கு எலும்புகளும், சதையும் இருக்காது'' என்று. அவர்கள் இயேசுவின் அன்பை உணர்ந்தார்கள். அவர், தங்களுக்காக சிலுவையில் மரித்ததை உணர்ந்தார்கள். ஒருவேளை மக்கள் அதை உணராவிட்டால், சுவிசேஷம் உள்ளது, அதை நாம் அவர்களுக்கு சொல்வோம். அவர்கள் அதை உணரும் பட்சத்தில், விசுவாசிக்கும் நேரத்தில், பரலோகம் மிகவும் உகந்த ஒரு இடம் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்துவோம், ஏனென்றால் இயேசு அங்கே உள்ளார். பிறகு, இயேசுவை நேசித்தவர்கள் நமக்கு முன்னால் அங்கே சென்றுவிட்டதாக கூறி, அவர்களை நாம் ஊக்குவிக்கலாம். அந்த மக்கள் யாரென்பதை சில சூழ்நிலைகளில் அவர்களுக்கு தெரியும். மற்றபடி அது அவர்கள் தாத்தா, பாட்டியாகவும் இருக்கலாம், அல்லது அவர்கள் சந்தித்திருக்காத வேறு உறவினர்களாகவும் இருக்கலாம், அந்த உறவினர்களை அவர்கள் பரலோகத்தில் சந்திக்க விரும்புவார்கள், ''இயேசுவை நேசிக்கும் அந்த மக்களை சந்திப்பது வியப்பாக இருக்கும், அந்த இடத்தில் ஒருவரை ஒருவர் புண்படுத்தாமல் இருப்பார்கள் என்பது நிச்சயம்.

பரலோகத்தில் என்ன இருக்கிறது என்பதை உறுதிபடுத்துவதற்காக அதை நாம் தெளிவாக சொல்ல வேண்டும். இன்பதுத், மகிழ்ச்சியும், அதிசயமும், சிரிப்பும் பரலோகத்தில் இருப்பதாகும். அதேசமயம் உலகத்தில் உள்ள தீமையான விஷயங்கள் அங்கே இருக்காது என்பதே உண்மை. ஒருவேளை அவர்கள் அந்த செய்தியை கேள்விப்படாமல் இருக்கலாம், அவர்கள் தங்களை அறைக்கு செல்வார்கள், அந்த விவாதங்களை நிறுத்துவார்கள், பிறகு விஷயங்கள் மாறும் சூழ்நிலை உருவாகும்.

இதை குழந்தைகளிடம் நாம் எப்படி சொல்வது? அவர்கள் தெளிவானவர்கள். இந்த உலகில் பல தீய விஷயங்கள் நடப்பது அவர்களுக்கு தெரியும். அவர்கள் தனியாக வெளியே செல்வது நல்லுது இல்லை என்று அறிவார்கள். இப்படிபட்ட விஷயங்கள் உலகில் அநேகம் உள்ளன. நான் நினைப்பது எனன்வென்றால், நம் குழந்தைகளும், பேரப்பிள்ளைகளும், நல்ல விஷயங்களை அறிய நாம் உதவ வேண்டும், ஆனால் தவறான விஷயங்களை அவர்கள் அறியாதபடி செய்யவேண்டும், தேவன் படைத்துள்ள பரலோகத்தைப்பற்றி அவர்கள் முழுவதும் அறியவேண்டும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஒரு குழந்தை கேட்கலாம், ''பரலோகம் எங்க இருக்கு பாட்டி?'' என்று. ''பரலோகம் எங்க இருக்குமா'' என்று'' அதுபற்றி என்ன சொல்வீர்கள்?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: அது வேதத்தில் உள்ளது, அதை பற்றிய விளக்கமும் அதில் மிகவும் தெளிவாக உள்ளது, ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அது பற்றிய விளக்கம் இல்லை. அதை அறிய முடியும், ஆனால் பார்க்க முடியாது. நான் குழந்தைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் கூறியிருக்கிறேன், நாம் நினைப்பதைவிட பரலோகம் அருகில் உள்ளது என்று. ஒரு மெல்லிய சுவரினால் அது பிரிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அதன் மறுபக்கத்தை நம்மால் பார்க்கமுடியாது.

2 ராஜாக்களில், எலியாவுக்கு தேவன் ஒரு உத்தரவிட்டார், ''உன் ஊழியனின் கண்களைத் திற'' என்றார், அதன் மூலம் அவன் நடந்துகொள்வதை பார்க்க முடியும். தேவன் நம்மோடு உள்ளார், எனவே தேவன் வேறு எங்கும் சென்றுவிடவில்லை, ஆனால் அவர் நமது இடத்தில் இருக்கவில்லை. எனவே அதில் நமக்கு தெளிவு தேவை. ஏனென்றால், ''தேவன் பரலோகத்தில் இருக்கிறார் என்று நாம் சொன்னால், நம்மோடு தேவன் இல்லை என்று அர்த்தம் ஆகிவிடும். எனவே இப்படி சொல்வோம், ''விசேஷமாக அவர் பரலோகத்தில் உள்ளார், ஆனால் நாம் இயேசுவை அறிந்தால், நம்மைச் சுற்றி மட்டும் அவர் இருக்கமாட்டார், நம்மிலும் அவர் இருப்பார். ஒரு மனிதன் என்ற முறையில் அவர் உங்களில் உள்ளார்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஒரு அழகிய சிறுமி, எங்கள் குழுவில் உள்ள அவளது தாத்தாவிடம் கேட்டாள், ''ஒருவேளை உங்களுக்கு முன்னால் நான் இறந்துவிட்டாள், அதன் பின்னர் பரலோகம் சென்றால் என்னை அங்கே வரவேற்பது யார்? என்றாள்.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: நமக்காக பரலோகத்தில் காத்திருக்கும் வரவேற்பு பற்றி 1 பேதுரு கூறுகிறது, அதுவே உண்மையாகும். நான் முக்கியமாக நினைப்பது என்னவென்றால், இயேசு கிறிஸ்துவை பரலோகத்தில் வரவேற்றது இயேசுவே என்பதாகும். ஒரு ஊழியன் அவனது எஜமானின் பிரசன்னத்தில் நுழைவது போன்றது அதுவாகும், ''நீ நல்லதை செய்தாய் என் விசுவாச ஊழியனே,'' ''உன் எஜமானின் மகிழ்ச்சியில் நீயும்பங்கெடு.'' அப்படிபட்ட வரவேற்பு இயேசுவுக்கு வழங்கப்பட்டிருந்தால், அது திருப்தியானதாகும்.

இந்த விபரங்கள் பற்றி அநேக மக்கள் தெரிந்திருக்கலாம், அநேக மக்கள் தெரியாமலும் இருக்கலாம், விரைவில் அவர்களுக்கு அது தெரியும். ஆண்டுகள் ஒவ்வொன்றாக கழியும், பரலோகத்தில் இருப்பவர்கள் இப்படி நினைப்பார்கள், நாம் நேசிக்கும் மக்கள் இங்கு வருவார்கள், அவர்களை நாம் வரவேற்போம்: என்று.

ஒரு குழந்தையிடம் சொல்லுங்கள், ‘‘நீ முதலாவதாக விருந்துக்கு வந்துள்ளதால், எங்கள் குடும்பத்தில் முதலாவதாக உள்ளாய் என்று. அதை எல்லாரும் பின்பற்றுவார்கள். நாம் சற்று தாமதமாகப் போவோம். ஆந்த விருந்தில் நீங்கள் முதலாவதாகவோ அல்லது கடைசியாகவோ இருப்பீர்கள். ஆனால் அநேக மக்கள் முதலாவதாக இருக்கவே விரும்புவார்கள். நாம் யாரும் இறப்பதையோ, இந்த உலகை விட்டு செல்வதையோ விரும்பமாட்டோம், குறிப்பாக இளைஞர்கள் விரும்பமாட்டார்கள், ஆளால் அது நிகழும்போது பரலோக விருந்தில் முதலாவதாக இருப்பார்கள்.

என் பள்ளி தோழர் ஜெரியிடம் நான் சொல்வது உண்டு. இப்போது அவர் உயிரோடு இல்லை, நான் அவரிடம் சொன்னது இதுதான், ‘‘நீ துமலில் பரலோகம் சென்றால், எனக்காக அங்கே ஒரு நல்ல இடத்தை தேர்வுசெய், நான் வருகிறேன்’’ என்றேன்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: மேலும் சொல்கிறேன், ‘‘ உங்களின் ஒரு சிறுமி படுத்தபடுக்கையாய் இருந்து இறந்துவிட்டாள். அவளது தாயார் அதைப் பற்றி விளக்கமாக கூறினார். அதைபற்றி நீங்கள் இன்னொரு முறை கூறமுடியுமா, பிறகு இன்னொரு கேள்வி: அவர்கள் முதலில் பரலோகம் சென்றால், அங்கே தனிமையாகத்தானே இருப்பார்கள், பெற்றோர்கள் இல்லாமல், சகோதர சகோதரிகளும், நண்பர்களும் இல்லாமல் தானே இருப்பார்கள்? அதேசமயம் பூமியில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிவார்களா?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: ஏங்கள் குடும்பம் செய்தது என்ன? சிறுதி எமிலியை அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள், அங்கே இடையில் ஒரு கதவு இருந்தது. அவர்கள் சொன்னார்கள், ‘‘முதலில் நீ இந்த அடைக்கு போகப்போகிறாய், அங்கே இயேசு உன்னோடு இருப்பார், சரிதானே? நீ இயேசுவோடு இருப்பதால், தனியாக இருக்கப்போவதில்லை. நீ இப்போது கேட்கலாம், மீண்டும் என் குடும்பத்தோடு நான் இணையப்போகிறேனா என்று, நிச்சயமாக, ஆனால் பரலோகத்தில் உன் ஆத்துமாவை நேசிப்பவரோடு நீ இருப்பாய். உன்னை படைத்தவரோடு நீ இருப்பாய். ஊன் பெற்றோரைவிட முக்கியமான ஒருவரோடு நீ இருப்பாய்.

எனவே அங்கே இருப்பதால் தனிமை இருக்காது. பிறகு ஒவ்வொருவராக அந்த அறைக்குள் சென்றார்கள். ஒவ்வொருவர் சென்றதும் அறை கதவு மூடப்பட்டது, அவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றை பிரதிபளித்தார்கள், கிறிஸ்து மீண்டும் வரப்போவதை பிரதிபளித்தார்கள், அவர்களிடம் ஒரு உறுதி வெளிப்படையாக தெரிந்தது. அந்த சிறுமியை பரலோகத்தில் சந்திக்கப்போவதே அந்த உறுதி.

அந்த சிறுமியோ, வேறு யாரோ பரலோகத்தில் இருந்தாலும், கீழே உள்ள பூமியில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள், அதைப்பற்றி ஓரளவாவது மக்கள் அறிந்து வைத்துள்ளதற்கு அறிகுறிகள் உள்ளன. வெளிப்படுத்தின விசேஷம் 6:10ல் மிகவும் தெளிவாக அது சொல்லப்பட்டுள்ளது. ‘‘பரிசுத்தமும், சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கு நியாயத்தீர்ப்பு செய்யாமலும், பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டு கூப்பிட்டார்கள்.’’ அது அவர்களுக்கு எப்படி தெரிந்தது?

ஏனென்றால் அந்த அளவிற்காவது பூமியில் என்ன நடக்கிறது என்பது அவர்களுக்கு தெரிந்திருந்தது. லூக்கா 15 இந்த உண்மையை பற்றி கூறுகிறது, ‘‘காணாமல் போன வெள்ளிக்காசை கண்டுபிடித்தேன் என்னோடே கூட சந்தோஷப்படுங்கள். அதுபோல மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், என்றார்.’’ அது சொல்லப்பட்ட விதம் மிக அருமையாக உள்ளது. இயேசுவுக்கு அப்படி சொல்வது சுலபமாக இருக்கும், அதாவது, ‘‘ஒரு பாவியானவன் மனந்திரும்பினால், பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் மகிழ்வார்கள்.’’ உள்ளபடி அது சொல்வது இதுதான். தேவதூதர்களின் முன்பாக அந்த மகிழ்ச்சி ஏற்படும்.

தேவதூதர்களின் பிரசன்னத்தில் யார் இருப்பார்கள்? தேவன் இருப்பார் அவர் மகிழ்வார், அது உறுதி. தேவ தூதர்கள் மகிழ்வார்களா? அதில் சந்தேகமில்லை. யாரெல்லாம் தேவதூதர்களின் பிரசன்னத்தில் இருப்பார்கள்? தேவ மனிதர்கள் இருப்பார்கள். இறந்துபோன அவர்கள் குடும்பத்தினர் இருப்பார்கள், அவர்கள் எல்லாருமே கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து அவரை நினைத்து ஜெபித்தவர்கள். அது ஒரு வலிமையான விஷயமாகும். அவர்கள் நேசித்தவர்கள் ஆவியின் மூலம் அந்த ஒரு நிலையை அடையும்வரை, அப்படிபட்ட ஒரு மாற்றம் அவர்களுக்கு வராது என்பது உண்மை.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஒரு சிறிய இடைவேளை இப்போ்து. நாங்கள் மீஷ்டும் வருவோம். “நாம் ஆவியாக இருப்போமா?” “தேவதூதர்களாக இருப்போமா?” நம்முடைய உடல் எந்த நிலையில் இருக்கும்? என்று குழந்தைகள் கேட்கலாம். “பரலோகம் ஏன் வியப்பானது?” என்று குழந்தை தந்தையை கேட்கலாம். நாங்கள் மீண்டும் வரும்போது, ரேன்டி அந்த கேள்விகளுக்கு பதிலளிப்பார், இணைந்திருங்கள்.

--------------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நாங்கள் வந்துவிட்டோம். நாம் டாக்டர் ரேன்டி அல்கார்னுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், அவர் இந்நாட்டில் பரலோகம் பற்றி நன்கு அறிந்தவர். ரேன்டி, குழந்தைகள் பெற்றோரிடம், தாத்தாபாட்டியிடம் கேட்கும் கேள்விகளுக்கு நாங்கள் பதிலளிக்கிறோம், அந்த கேள்விகளுக்கு விடையளிக்க நீங்கள் எங்களுக்கு உதவவேண்டும். எங்களிடம் சில கேள்விகள் வந்துள்ளன, “நாங்கள் ஆவியாக இருப்போமா தாத்தா, பாட்டி? “நாங்கள் தேவதூதராக இருப்போமா, அப்பா, அம்மா? நாங்க அங்க எப்படி இருப்போம்? எந்தமாதிரியான சரீரம் எங்களுக்கு இருக்கும் என்பதே அந்த கேள்விகள்.

டாக்டர். ரனேடி அல்கார்ன்: நூம் ஆவியாக இருக்கமாட்டோம் என்பதை அறிவீர். பரலோகத்தைப் பற்றி நிகழ்காலத்திலும் சித்தரிக்கப்பட்டுள்ளது, அங்குள்ளவர்கள் ஆடையோ்டு இருப்பார்களாம். அவர்களிடம் டிரம்பெட் போன்ற பல இசைகருவிகள் இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. பனை ஓலைகள் இருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. தேவனின் இந்த உன்னதத்தில் அபூர்வமான மரங்கள் இருக்குமாம். நாம் மரித்தபின்பு அங்கே செல்லும்போது, நாம் நித்திய ஜீவனை அடைவோம், நமது முடிவான அந்த பரலோகத்தில் நாம் புதுப்பிக்கப்பட்ட மனிதர்களாக இருப்போம். அதைப் பற்றி குழந்தைகளிடம் சொல்வது மிக முக்கியமாகும். நாம் உடலில்லாமல் அங்கே ஆவியாக இருப்போம் என்று கூறி, குழந்தைகளுக்கு வியப்பூட்டாதீர்கள். அதற்காக பரலோகம் படைக்கப்படவில்லை. ஆவியாக இருப்பதற்கு எந்த ஒரு குழந்தையும் விரும்பாது. ஓடி விளையாடவேண்டும் என்றும், உணவு உண்ணவேண்டும் என்றும், எப்போதும் உல்லாசமாக இருக்கவேண்டும் என்றும் அவை விரும்பும். அந்த புதிய பூமியில் நாம் புதுவாழ்வு பெறும்போது, அப்படிபட்ட நிகழ்ச்சிகள் நடக்கப்போவது உறுதி. எனவே யாரும் ஆவியல்ல. தேவதூதர்கள் அல்ல. தேவதூதர்களும், மனிதர்களும் மிகவும் வித்தியாசமானவர்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: பரலோகம் நமக்கு சலிப்பாக இருக்குமா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: பரலோகத்தில் உள்ள எதற்கும் முடிவு கிடையாது. சலிப்பு என்பது வாழ்வில் உள்ள சாபத்தின் விளைவு. பரலோகத்தில் செய்வதற்கு என்றோ, செய்யாமல் இருப்பதற்கென்றோ எதுவுமில்லை. ஏனென்று தெரியுமா? ஏனென்றால், பூமியில் நமக்கு அதிருப்தி உள்ளது, மகிழ்ச்சியில்லாமை உள்ளது, நமது ஆசைகளை எப்படியாவது அடையவேண்டுமென்ற எண்ணம் உள்ளுது. ஆனால் பரலோகத்தில் நம்மை திருப்திபடுத்துபவர் யார் என்று உங்களுக்கு தெரியும். அவரே தேவன். இயேசுகிறிஸ்து நமது தேவைகளை அங்கே வழங்கிடுவார். நமது மகிழ்ச்சியின் அடித்தளமே அவர் தான், நமது அர்த்தமுள்ள நடைமுறையும், சந்தோஷமும், எல்லாமும் அவர்தான்.

அவரது ஊழியர்கள் உதவுவார்கள், நாம் என்ன செய்வது, எங்கு செல்வது, யாரை பார்ப்பது என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். புதியவர்களை விருந்தில் சந்திப்போம். அதிலே மகிழ்ச்சி வருமா? நிச்சயமாக வரும் என்பதே உண்மை. பரலோகத்தில் நாம் ஒருவரை ஒருவர் சந்திப்பது மட்டுமல்ல, வேறு கலாச்சாரத்தின் வழிவந்த அநேக மக்களை நாம் அங்கு சந்திப்போம் என்பதே உண்மை, அவர்களது கதைகளை கேட்போம். அது என்ன ஒரு அருமையான இடம் தெரியுமா. நமக்கு தெரிந்த ஒரு விஷயம், தேவன் புதிய மனிதர்களைப் படைப்பார். புதிய இடங்களை உருவாக்குவார். அதில் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இருப்போம். அதே சமயம் நாம் சந்தித்திராத, நாம் நெருங்கி செல்லமுடியாம வனவிலங்குகளையும் பூமியில் அவர் படைப்பார். எனவே, பூமியில் இருப்பதைப்போல் பரலோகத்தில் சலிப்பு என்பது இருக்காது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: சில திரைப்படங்களில் நாம் பார்த்திருக்கிறோம், யாரோ நேசித்த ஒருவர் அறப்பார், அவருடைய பெற்றோரோ குழந்தையோ கல்லறைக்குச் செல்வார்கள், அங்கே இறந்துபோனவரிடம் பேசுவார்கள், பொது மக்களும், குறிப்பாக கிறிஸ்தவர்களும் நாம் நேசித்தவர்கள் இறந்த பின்பு பேசமுடியுமா என்று கேட்கிறார்கள், அவர்களது குறைபற்றி இயேசுவிடம் கூறினால், அவர் தீர்ப்பாரா? ஏன்கிறார்கள்.

டாக்டர். ரனேடி அல்கார்ன்: இதில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். “என் தாய் இறந்தபின்பு, என் மகளிடம் உன் பாட்டிக்கான செய்தியை இயேசு மூலம் சொல்லலாம் என்று சொல்லமாட்டேன்.” எனவே இறந்து போனவர்களை நினைத்து ஜெபிக்கவும், அவர்களிடம் பேசவும் குழந்தைகளை தூண்டக்கூடாது. ஆனால் நீங்கள் எப்போதும் இயேசுவிடம் பேசலாம், ஏனென்றால் அவர்தான் தேவனுக்கும் மனிதருக்கும் இடையிலான தொடர்பு, அவரே இயேசுகிறிஸ்து. எல்லா வழிகளிலும் அவர் அதை செய்வார். ஒன்றை என்னால் மிகவும் உறுதியாக சொல்லமுடியும்.

“இறந்துபோன என் பாட்டியை என்னால் கட்டியணைக்க முடியுமா என்று யாராவது ஜெபித்தால் அதற்கான விடையை நிச்சயமாக இயேசு வழங்குவார். அவரால் மட்டுமே அந்த விடையை வழங்க முடியும்.

கல்லறையைப் பற்றி ஒரு விஷயத்தை நாம் குழந்தைகளிடம் தெளிவுபடுத்துவது அவசியம், அதாவது கல்லறையில் நாம் நேசித்தவர்கள் இல்லை என்பதே அது. இறந்தபின் உள்ள மனிதனின் உடல், ஒருநாள் பரலோகத்தில் உயிர்த்தெழும், அதேசமயம் ஒன்று மட்டும் உறுதி, நாம் நேசித்தவர்கள் யாருமே கல்லறையில் இருக்கமாட்டார்கள், அதுவே நிச்சயம், உண்மை. அவர்கள் இருப்பது இயேசுவுடன். அவரது கரங்கள் அவர்களை பாதுகாக்கும். அதை நாம் தெளிவாக சொல்லவேண்டும். அந்த விஷயத்தை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் பொதுவாக மக்கள் கல்லறைக்கு வந்து பேசுவார்கள், இறந்தவர்களிடம் பேசுவார்கள். அவர்களுக்காக கல்லறை மீது சில பரிசுகளை வைப்பார்கள். சில கலாச்சாரங்களில் அது உள்ளது, அது ஆரோக்கியமில்லாத ஒரு விஷயம், ஏனென்றால் அவர்கள் நினைப்பதுபோல் யாரும் கல்லறையில் உயிரோடு இருக்கமாட்டார்கள்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ரேன்டி, சில குழந்தைகள் இப்படி கேட்கிறார்கள், அதாவது பரலோகத்தில், அந்த புதிய பூமியில், டிஸ்னிலேன்ட் போலவும், அழகிய மலைகளைப் போலவும், அழகிய கடற்கரையைப் போலவும், பொழுதுபோக்கு இடங்கள் போலவும், பல இடங்கள் உள்ளதா என்று கேட்கிறார்கள். அங்கே நாம் மகிழக்கூடிய வியப்பான இடங்கள் உள்ளபடியே இருக்குமா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: நிச்சயமாக, தேவன் எல்லையில்லா படைப்பாளி என்பதை நாம் அறிவோம். அழகான இந்த உலகம் என்பதை ஒருகாலத்தில் நமக்காக தேவனால் படைக்கப்பட்ட ஒன்றுதான். அதன்மூலம் நமது பிற்காலம் எப்படி இருக்கும் என்பதை நாம் நிச்சயமாக அறியலாம். பரலோகம் நமக்கு வியப்பாக இருக்கும். அங்கு மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நீர் நிலைகளைப் பற்றி நீங்கள் பேசினீர்கள். உதாரணமாக ஒரு நீர்வீழ்ச்சிக்கு சென்றால், அங்கே குளிக்கிறீர்கள், திடீரென அதில் தவறி விழுந்துவிடுகிறீர்கள். பிறகு உங்கள் நிலைமை எப்படி இருக்கும் என்று உங்களால் சொல்ல முடியுமா?

தேவன் படைத்த அந்த புதிய உலகத்தைப் போல் பூமியில் எந்தவொரு பொழுதுபோக்கான இடங்களையும் நம்மால் படைக்க முடியாது. பரலோகம் ஏன் பொழுதுபோக்காக இருக்காது? தேவனின் ரூபத்தில் மேலும், மேலும், மனிதர்கள் படைக்கப்படுவார்கள், அந்த மக்கள் நவீன பொருட்களை தங்கள் கரங்களால் தயார் செய்வார்கள். அந்த புதிய உலகில் அவை எல்லாம் இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இயேசுவைப் போல நாம் செல்வோமா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: ஆதை உறுதியாக சொல்லமுடியாது. இயேசுவால் மட்டுமே அதை சொல்லமுடியும். அவர் நினைத்தால் நாம் பறக்கும் சாதனங்களை உருவாக்க முடியும், அதை பலர் இந்த உலகில் செய்துள்ளார்கள், கிளைடர் விமானத்தை நான் உருவாக்கினேன், ஒருமுறை அது திடீரென உடைந்தது, அது ஒரு வேடிக்கை. கிளைடர் விமானம், மிக உயரத்தில் பறக்கும், மலை உச்சியலும் பறக்கும், நீர்வீழ்ச்சி மீதும் பறக்கும். அதைப் போன்ற பல விஷயங்கள் உள்ளன.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: தேவன் படைத்துள்ள பரலோகத்தில், அந்த புதிய பூமியில், அண்டவெளியில் உள்ளதுபோல கிரகங்களையும், நட்சத்திரக்கூட்டங்களையும், அங்கிருந்தபடியே நம்மால் பார்க்கமுடியுமா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: “பரலோகம் தேவன் மகிமையை சொல்லும் என்று தேவன் சொல்கிறார், எல்லா உன்னதங்களையும் உள்ளடக்கி தேவன் நமக்காக பரலோக்கதை படைத்துள்ளார் என்பதை ரோமர் 1 தெளிவாகக் கூறுகிறது. அதை நான் இப்போது நினைக்கிறேன், தேவன் படைத்துள்ள அந்த புதிய பீமியில் எல்லா மகிமையையும் நாம் தேடிச் சென்று பார்க்க முடியும். ஆவி என்ற விஞ்ஞானமே தேவனின் ஆவியில் வந்ததாகும். வரலாற்று அடிப்படையில் பார்த்தால், மகத்தான விஞ்ஞானிகள், அதாவது உண்மையான விஞ்ஞானிகள் அனைவரும், தேவனை மிகவும் நேசித்தவர்கள், அவர்கள் தேவனின் படைப்பில் உள்ள பல்வேறு அதிசயங்களை ஆராய்ச்சி செய்து விஞ்ஞான அதிசயங்களை படைத்தார்கள். எனவே நாம் இயற்கையாக இருப்போம், நாம் கண்டுபிடிப்பாளர்களாக இருப்போம். நான் நினைப்பது, நீண்டகாலமாக இது நடைமுறையில் உள்ளது.

உலகில் விஞ்ஞான படைப்புகள் ஏராளம் உள்ளன, அவை எங்கிருந்து வந்தது? மக்கள் ஏன் அதை பயன்படுத்த வேண்டும்? அண்டவெளியில் உள்ள கிரகங்களையும் நட்சத்திர மண்டலங்களையும் சுற்றிப்பார்த்து வரும்படி சாத்தான் நமக்கு கட்டளையிட முடியுமா? அந்த கட்டளைகள் எல்லாம் தேவனிடமிருந்து மட்மே வந்தது. அவர் நமக்கு ஆர்வம் தந்தார். அதை நாம் சுற்றிபார்க்கவும், ஆராய்ச்சி செய்யவும், அதன்மூலம் அவரை அறியவும் விரும்பினார். வருங்காலத்தில் நிச்சயம் நாம் அதை செய்வோம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஒரு குழந்தை கேட்கிறது, "அம்மா, அம்மா, பாட்டி, தாத்தா, இயேசுவை என் வாழ்வில் நான் அழைக்க வேண்டுமா? அதை எப்படி செய்வது? நீங்கள் சொல்வதென்ன?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: நிச்சயமாக நமது குழந்தைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் நாம் உதவ வேண்டும். இந்த உலகில் வேறு யாரையும் விட இயேசு நமக்கு தேவையானவர். இந்த உலகில் யாராவது தாயார் இல்லாமலும், தந்தை இல்லாமலும் சகோதரர் இல்லாமலும் சகோதரி இல்லாமலும், நண்பர்கள் இல்லாமலும் இருக்க விரும்புவார்களா? நிச்சயம் அவர்கள் அப்படி விரும்ப மாட்டார்கள். இயேசு ஒருவரே உங்களைப் பற்றி மிகவும் நன்றாக அறிந்தவர். மற்றவர்களைவிட உங்களை மிகவும் அதிகமாக நேசிப்பவர். நாம் பிறரை இதயப்பூர்வமாக நேசிக்கிறோம், ஆனால் அதற்கு அளவு உண்டு. அவர் நேசத்திற்கோ அளவே இல்லை. நமக்கான விலையை அவர் சிலுவையில் கொடுத்துள்ளார். எனவே அவரை நீங்கள் அறியவேண்டும், அவரை அறிவதற்கான வழிகளையும் முதலில் அறியவேண்டும்.

நான் நினைப்பது என்னவென்றால், ஒரு குழந்தை வளர்ந்து, தான் தவறு செய்வதை அறிந்தால், அதுதான் பாவம், ஏதோ ஒரு பிரச்சனையால் அது வந்தது. அந்த பாவம் தேவனிடமிருந்து மனிதரை விலக்குகிறது. எனவே உங்கள் பாவங்களை ஒப்புக்கொண்டு தேவனிடம் மன்னிப்பு கேட்பதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன." இயேசுவிடம் நீங்கள் தொடர்பு வைத்திருந்தால், நீங்கள் மீண்டும் பாவம் செய்தாலும், அவரிடம் மன்னிப்பு கேட்கலாம். உங்களுக்கு இயேசுவுடன் தொடர்பு ஏற்பட்டவுடன் அதை நீங்கள் செய்யவேண்டும். ஒருமுறை நீங்கள் அதை செய்தால், மீண்டும் மீண்டும் தவறு செய்யும் எண்ணம் உங்களுக்கு வராது. சில நேரங்கிளல் யாருக்காவது அப்படி ஒரு எண்ணம் வந்தாலும், அவர்கள் நிச்சயம் காப்பாற்றப்படுவார்கள் என்பது உறுதியாகும். ஆனால் நாம் சொல்லவேண்டியது, "உங்களுக்கு மட்டுமல்ல, எல்லாருக்கும் உண்மையாக உள்ள விஷயங்களைத்தான். எல்லோரையும் விட தேவன் நமக்கு தேவை."

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: குழந்தைகள் அதைப்பற்றி பலவிதமாய் நம்மிடத்தில் கேட்கக்கூடும், "அம்மா, உண்மையிலேயே நான் பரலோகம் செல்வேனா, அதை நான் எப்படி அறிவது?" என்று.

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: அதைத்தான் வேதம் சொல்கிறது, "தேவனின் வாக்குத்தத்தம் என்று." 1 யோவான் 5, "இயேசுவானவர் தேவனுடைய குமாரரென்று விசுவாசிக்கிறவனேயன்றி உன்னதத்தை ஜெயிக்கிறவன் யார்? என்று. அதை அறிந்தால் உண்மையை நீங்கள் அறியலாம். அது இரத்தத்தின் வாக்குத்தத்தம். எனவே எதிர்பார்ப்பு என்ற அடிப்படையில் வேதவசனத்தை நாம் பார்க்கக்கூடாது, எதிர்பார்ப்பு என்பது நமது ஆசையின் வெளிப்பாடு, ஆனால் வேதத்தில் உள்ள எதிர்பார்ப்பு, தேவனின் இரத்தத்தால் உருவானது. அதுவே உண்மையாகும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: அடுத்த வாரம் இந்த தலைப்பு நிறைவு பெற உள்ளது, அதாவது உங்கள் தாயிடம் என்ன சொல்வது, தந்தையிடம் என்ன சொல்வது, பணியில் உள்ள நண்பர்களிடம் என்ன சொல்வது, நீங்கள் அறிந்தவர்களிடம் என்ன சொல்வது என்பதெல்லாம், அதில் வரும். எல்லாரும் பரலோகம் செல்ல விரும்புவார்கள், ஆனால், பலர் இயேசுவை தங்கள் வாழ்வில் அழைத்திருக்க மாட்டார்கள், இருந்தாலும் பரலோகம் செல்லப்போவதாக நினைப்பார்கள். அவர்களுக்கு நீங்கள் சொல்வதென்ன? ஒரு மனிதன் இருக்கக்கூடிய ஒரு ஆபத்தான சூழ்நிலையே அதுதான், ஆனால் அந்த சூழ்நிலையில் இயேசு நிச்சயம் பேசுவார். இந்த தலைப்பை அடுத்த வாரம் தொடமாறு ரேன்டியை கேட்கிறேன், அதை அவசியம் பாருங்கள்.

எங்களுடைய மற்ற டிவி நிகழ்சிகளை பார்க்க எங்களுடைய ஜான் அன்கேர்பெர்க் ஷோ ஆப்பை இலவசமாக பதிவிறக்கம் செய்திடுங்கள்.

"இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கான ஜெபம்" JA show.org